ஈச்சம்பட்டி கிராமத்தில் ஆரம்பப்பள்ளிக் கட்டிடம்.

*வினா எண் 13—திரு. எஸ். வி. இராமசாமி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரம்பலூர் தாலுக்கா, குரும்பலூர் பேரூராட்சியில் ஈச்சம்பட்டி கிராமத்தில் அரிசன நலத்துறையால் ஆரம்பப்பள்ளி கட்டிடம் கட்ட நில ஆர்சிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் கட்டிடம் எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) ஈச்சம்பட்டி கிராமத்தில் அரிசன நல ஆரம்பப்பள்ளி கட்டிடம் கட்ட நிலம் ஆர்சிதம் செய்யப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

சென்னையிலுள்ள அரிசனப் நலப்பள்ளி ஆசிரியர்கள்.

*வினா எண் 14—திரு. சு. பாலன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள அரிசனப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆசிரியைகள் எவ்வளவு பேர் ?

(ஆ) இதில், அரிசன வகுப்பைச் சார்ந்தவர்கள் எத்தனை சதவிகிதம் ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) சென்னையில் உள்ள அரிசன நலத்துறைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகளின் எண்ணிக்கை முறையே 37 மற்றும் 122 ஆகும்.

(ஆ) இதில் அரிசன வகுப்பைச் சார்ந்தவர்கள் 70·4 விழுக்காடு ஆகும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அரிசனப் பள்ளியில் பணியாற்றுகின்ற தலைமை ஆசிரியர்கள் எத்தனை சதவீதம் என்பதை அறிவிக்க இயலுமா ?

1979 அக்டோபர் 27]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தலைமை ஆசிரியர் களின் சதவீதத்தைப்பற்றிக் கேட்டார்கள். தமிழ்நாடு முழுவதும் 942 பள்ளிகள் இருக்கின்றன. மேலும் விவரம் தேவை என்றால் தனிக் கேள்வி போட்டால் சேகரித்துத் தருகிறேன்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிகளில் வேலைவாய்ப்புக் கொடுக்கும் பிரச்னையில் தனியார் பள்ளிகளில் அரிசனங்களுக்கு வேலை கொடுக்க மறுக்கப் படுகிறது. அதற்குக் காரணம் அது தனியார் பள்ளி என்று சொல்கிறார்கள். ஆனால் அரசு உதவி பெற்றுத்தான் அந்தத் தனியார் பள்ளிகள் நடைபெறுகின்றன. ஆகவே, அவைகளில் இந்த அரிசனங்களுக்கு விகிதாச்சாரப்படி வேலை கொடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர வர்களே, அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, எடுக்க முடியாது. இந்தத் துறையைப் பொறுத்தவரையிலும் நாங்கள் நடத்தும் பள்ளியைக் கண்காணிக்கவும் வேலை வாய்ப்பை அமல் படுத்தவும் வாய்ப்பு இருக்கிறதே தவிர மற்றவர்கள் நடத்தும் பள்ளிகளைப்பற்றி நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இல்லை.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியன்களில் அரிசனங்களுக்கு நடத்தும் பள்ளி களில் கட்டிடம் கூட இல்லாமல் இருக்கிறது. குறிப்பாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சென்னையில் உள்ள பள்ளியைப் பற்றிய கேள்வி. சென்னையில் பஞ்சாயத்து யூனியன் கிடையாது. எனவே, அதுபற்றிய விவரம் இருக்காது.

[முற்பகல் 9.40.]

திரு. சி. ஆறுமுகம் : கிராமப் பகுதிகளில் வழங்கி வருகிற அரிசன நலப் பள்ளி என்ற பெயரையே வழங்கி வருவது முன்னேறி வருகின்ற நம்முடைய தமிழகத்திற்குப் பொருந்துவதாக இல்லை. ஆகவே, அரசாங்கத்தின் உள்ளாட்சிப் பள்ளி என்று மாற்ற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தற்போது அந்த உத்தேசம் இல்லை.